07.12.2009

அன்புடையீர்,

## 2010 சனாதிபதித் தேர்தல் - புதியதொரு யுகத்தை ஆரம்பிப்போம்

சுதந்திரத்தின் பின்னர் கடந்துவந்த 62 வருட காலத்தினுள் எதிர்நோக்கியுள்ள மிகவும் தீர்க்கமானதொரு திருப்புமுனையிலேயே 2010 இல் சனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கியுள்ளோம். நாட்டின் ஐக்கியம், மக்களின் சுதந்திரம், சனநாயகம், இளம் சந்ததியினரின் எதிர்காலம் ஆகிய அனைத்து விடயங்களும் சவாலுக்கு உள்ளாகியுள்ளன. போட்டியிட முன்வந்துள்ள பிரதானமான இரண்டு வேட்பாளர்களில் எவரையும் பொது மக்களால் தெரிவு செய்ய முடியாதுள்ளது. எவ்விதக் கொள்கையும் இல்லாத இவர்கள் இருவரும் சந்தர்ப்பவாதத்தின் உச்சிக்கே சென்றுள்ளளர் என்பதோடு, சாப்பிடத் தேவையானபோது கவரகொய்யாவை உடும்பாக மாற்றுவதில் மிகத் திறமையானவர்கள் என்பதை தெளிவாகவே நிரூபித்துள்ளனர். வடக்கின் தமிழ் மக்கள், கிழக்கின் முஸ்லிம் மக்கள் மற்றும் மலைநாட்டுத் தமிழ் மக்கள் தொடர்பில் எவ்விதக் கரிசனையும் காட்டாது, தெற்கின் பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்காக மாத்திரம் நடத்துகின்ற ஒரு தேர்தலாகஇத் தேர்தலை இவ்வேட்பாளர்கள் மாற்றியுள்ளனர்.

புலிகள் அமைப்பை யுத்த ரீதியில் தோல்வியுறச் செய்தமையின் காரணமாக யுத்த பீதி எதுவும் இல்லையென அரசாங்கத்தின் தலைவர்கள் கூறுகின்ற போதிலும், பயங்கரவாதத்தின் அச்சம் இன்னமுமே நிலவுகின்றது. கடந்த நான்கு வருடங்கள் பூராகவும் ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள், கலைஞர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் எதிர்க்கட்சியின் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஆகியோரை வேட்டையாடுவதில் ஈடுபட்டிருந்த மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி, இச்சனாதிபதித் தேர்தலில் எவ்விதத்திலாயினும் வெற்றி பெறுவதற்கு எந்தவொரு மோசடியையும் செய்வதற்குப் பின்வாங்கமாட்டாது. ஏனெனில், இந்தச் சனாதிபதித் தேர்தலில் தோல்வியடையுமெனில் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு இந்நாட்டில் வசிப்பதற்குக்கூட முடியாததொரு நிலைமை உருவாகும் என்பதனாலாகும்.

தமிழ் மொழியைப் பேசுகின்ற மக்கள் எதிர்நோக்கியுள்ள தேசிய பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு சர்வ கட்சிக் குழு எனப்படுகின்ற குழுவின் ஊடாக பெயரளவிலானதொரு தீர்வையேனும் முன்வைப்பதற்கு ராஜபக்ஷ அரசாங்கத்தினால் முடியாதுள்ளது. யுத்தத்தின் பின்னர் ஒரு அரசியல் தீர்வை முன்வைப்பதாக கூறப்பட்ட அரசாங்கத்தின் மாபெரும் பொய் தற்போது அம்பலத்திற்கு வந்துள்ளது. தெற்கின் சிங்கள முதலாளித்துவக் கட்சிகள் இரண்டினாலும் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முடியாது என்பது மிகத் தெளிவாகும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டு அதனடிப்படையில் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, சோசலிசவாதிகளாகிய எம்மால் மட்டுமே முடியுமாயிருக்கும். தமிழ், முஸ்லிம் மக்களது சுதந்திரம் மற்றும் தேசிய விடுதலையை உறுதி செய்து சமமான பிரசைகளாக வாழக்கூடிய ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு இனவாதத்திற்கும், முதலாளித்துவத்திற்கும் எதிராக கொள்கை ரீதியிலானதொரு போராட்டத்தில் ஐக்கிய சோசலிசக் கட்சி மட்டுமே ஈடுபட்டுள்ளது.

மேலும், ஜெனரல் சரத் பொன்சேகா யுத்தவாத இனவாதிகளுக்கும் புதிய தாராளமயவாத முதலாளித்துவத்தினருக்கும் இடையே அசைந்தாடுகின்ற பொம்மையாக மாறியுள்ளார். அவர் உண்மையிலேயே இந்தச் சக்திகளின் கைப்பொம்மையாவார். அவரது மிலிட்டரி கௌரவத்தின் மூலம் பொது மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்காது. ராஜபக்ஷ ஆட்சி கடந்த நான்கு ஆண்டுகளிலும் மேற்கொண்ட அனைத்துப் பாவ காரியங்களிலும் அவர் பெருமளவு பங்கெடுத்துள்ளார். அவர் மஹிந்த – கோட்டாபய இரட்டை மாட்டு வண்டியிலிருந்து விலகியது ஏதேனும் கொள்கை ரீதியிலான பிரச்சினையின் காரணத்தினாலல்ல. இராணுவத் தலைமைத்துவத்திலிருந்து விலகும் வரை அவர் மஹிந்த – கோட்டாபய இரட்டை மாடுகளின் வக்கிர இயல்பையே கடைப்பிடித்தார். ஆதலால் ராஜபக்ஷவுக்குப் பதிலாக பொன்சேகாவுக்கு வாக்களிப்பதென்பது இஞ்சியைக் கொடுத்து மிளகாயை வாங்கிய கதையைப் போன்று எவ்விதப் பயனுமற்ற விடயமாகும்.

எனவே, நாட்டினதும் மக்களினதும் சுதந்திரத்தைப் பாதுகாத்து வடக்கிலும் தெற்கிலுமுள்ள எமது பிள்ளைகள் அச்சமும் அடிமைத்தனமும் இன்றி வாழக்கூடிய சூழலை உருவாக்குவதற்கெனில், 1977 இல் இருந்து ஐதேக ஸ்ரீலசுக - கூட்டு அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைக்கார புதிய தாராளமய பொருளாதார முறையிலிருந்தும் அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாத ஒழிப்புச் சட்டம் ஆகிய சட்டங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற அடக்குமுறை ரீதியிலான நடைமுறையிலிருந்தும் நீங்கிய ஆட்சிமுறையொன்று அவசியமாகின்றது. வடக்கிலும், கிழக்கிலும், மலை நாட்டிலும் வாழ்கின்ற தமிழ் மொழி பேசும் மக்களது உரிமைகளை உறுதி செய்தல், அம்மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றின் மூலம் தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாணல், நாட்டின் தேசிய வளங்கள் மற்றும் செல்வத்தை அனைவருக்கும் மத்தியில் நியாயமான விதத்தில் பகிர்ந்தளிக்கக்கூடிய வகையில் சுரண்டல்கள் அற்ற ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புதல், புற்றுநோய் போன்று புரையோடியுள்ள ஊழல்களை ஒழித்தல் மற்றும் அரசியல்வாதிகள்

நேரடியாகவும் எப்போதும் (இரண்டு தேர்தல்களுக்கு இடைப்பட்ட காலத்தில் கூட) மக்களுக்குப் பொறுப்புக் கூறுகின்ற ஆட்சி முறையொன்றைக் கட்டியெழுப்புதல் ஆகியன எமது சமூகத்தில் முதலாவதாக நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்களாக உள்ளன. கடந்த 4 வருடங்களாக தமிழ் மக்களைக் கடத்தியும், கொலை செய்தும் மற்றும் கோடிக் கணக்கில் பணத்தைக் கப்பமாகப் பெற்றும் மேற்கொள்ளப்பட்ட பயங்கர நிலைமையினுள் சிவில் கண்காணிப்புக் குழுவின் தலைவர் என்ற வகையில் நாம் மேற்கொண்ட சேவைகளைப் பற்றி இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

கொழும்பு, திம்பிரிகஸ்யாயவில் இடதுசாரி இயக்கத்துடன் தொடர்புடைய தொழிலாளர் வர்க்க குடும்பமொன்றைச் சேர்ந்தவரான தோழர் சிறிதுங்க ஜயசூரிய மேற்கூறப்பட்ட முக்கிய நோக்கங்களை முன்னிட்டே சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார். கஷ்டப்படும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் பொருட்டு முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்துள்ள அவர், மேற்படி போராட்ட ரீதியிலான அரசியலின் காரணமாகவே கடந்த 2005 சனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டு மூன்றாம் இடத்தைப் பெற்றார். தொழிற் சங்கப் போராட்டங்களை ஒடுக்குதல், ஊடகவியலாளர்களைக் கொலை செய்தல் மற்றும் அவர்களைத் தாக்குதல் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஊடகத்துறை அடக்குமுறைக்கும் அரச பயங்கரத்திற்கும் எதிராக கடந்த காலத்தில் உருவாகிய மக்கள் போராட்டங்களின்போது முற்போக்கு இடதுசாரி மற்றும் சனநாயக அனைத்து சக்திகளுடனும் தோழர் சிறிதுங்க ஜயசூரிய எப்போதும் முன்னணியில் இருந்த தலைவராகத் திகழ்ந்தார். இடதுசாரி இயக்கத்தினுள் வேலைத்திட்டமொன்றினதும் எதிர்கால நடவடிக்கையொன்றினதும் அடிப்படையில் தேர்தல்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதான இடதுசாரிகளின் ஒற்றுமைக்கு அப்பால் சென்று தனிப்பட்ட தேவைகள் எதுவுமின்றி உண்மையான இடதுசாரி ஐக்கியத்தினைக் கட்டியெழுப்பும் பொருட்டு நாம் எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. இந்நிலைமையில் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு எமக்கு நேரிட்டது.

சுதந்திரம், சனநாயகம் அதிகாரப் பகிர்வுடன் கூடிய ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கும், நல்லாட்சி மற்றும் மிகவும் நியாயமானதொரு சமூகக் கட்டமைப்பிற்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் சோசலிச இடதுசாரி வேட்பாளரான தோழர் சிறிதுங்க ஜயசூரியவுக்கு உங்களது ஒத்துழைப்பை வழங்குமாறு நாம் உங்களிடம் வேண்டுகிறோம். தோழர் சிறிதுங்கவின் வேட்பாளர் நிலையானது, குறைந்தபட்சம் மேற்படி விடயங்களின் அடிப்படையிலாவது உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை வழங்கக்கூடிய வகையில் விரிவானதொரு தளத்தினைக் கட்டியெழுப்புவதற்கான கலந்துரையாடலின் பொருட்டு திறந்ததாக உள்ளது. நீங்கள் இதற்கு இணக்கம் தெரிவிப்பீர்களெனில், இதற்கு உங்களது பங்களிப்பை எவ்வாறு வழங்கலாம் என்பதைப் பற்றி அறிவிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

1. ஊடகக் கலந்துரையாடலில் பங்குபற்ற நீங்கள் விரும்புகிறீர்களா,
2. பிரசாரக் கூட்டமொன்றில் பேச்சாளராக இருக்க விரும்புகிறீர்களா,
3. பத்திரிகை அறிவித்தலொன்றில் கையொப்பமிடுவதற்கு நீங்கள் விரும்புகிறீர்களா,
4. பண ரீதியில் உதவி செய்வதற்கு நீங்கள் விரும்புகிறீர்களா,
5. இவ்விடயம் தொடர்பாக செயலாற்றுவதற்கு முன்னர் எம்மைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு கருதுகிறீர்களா,

இது பற்றிய உங்கள் கருத்துக்களை தொலைபேசியின் மூலம் அறிவிக்கலாம்.
செல்லிடத் தொலைபேசி: சிறிதுங்க: 0775704444 0772464005
ஸ்ரீநாத்: 0714027955
தம்மிகா: 077443684

இப்படிக்கு அன்புக்குரிய,

| | | |
|---|---|---|
| ஸ்ரீநாத் பெரேரா | சிறிதுங்க ஜயசூரிய | சுப்பிரமணியம் நகுலராஜா |
| பிரசாரச் செயலாளர் | பிரதம செயலாளர் | மத்திய செயற் குழு அங்கத்தவர் |
| ஐக்கிய சோசலிசக் கட்சி | | யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் |